உ
சிவமயம்

# இந்து சாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஞூ (1889) ஆவணிமீ 28-ம் உ அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அஎ] யாழ்ப்பாணம்: இராக்ஷத ஞூ புரட்டாதிமீ ௪-உ வெள்ளிக்கிழமை (19-9-1975) [இல: உச

# சமயப் பெருநாள் விடுமுறை நீக்கம் சரியாகாது!

## ஏன் இந்த (த்தடு) மாற்றம் என்று விளங்கவில்லை?

அரசியல் மாற்றங்கள்வரலாம்; மாறலாம். சமயங்களை மரியாதையுடன் வரவேற்கும் முறை ஏன் மாற வேண்டும்?

அடுத்த ஆண்டில் விடுமுறை நாட்களின் எண்தொகையை அரசினர் குறைத்திருக்கின்றார்களாம்! எப்படித் தெரியுமா?

சிவராத்திரி — தீபாவளித் திருநாட்களிலே அரசினர் கண் வைத்துவிட்டார்கள்!

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

ஈழத்தின் முதலாவது சங்கீதபூஷணம்

## திரு. சந்திரசேகரத்திற்கு 'இசையரசு' பட்டம்

### யாழ். அ. இசைத்தமிழ் மன்றத்திற்கு நீதியரசர் பெரும் பாராட்டு

"திரு. சந்திரசேகரம் அவர்களை நான் பல ஆண்டுகள் அறிவேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் உருவாக்கிய முதற் சங்கீத பூஷணம் என்ற பெருமையை ஈழத்திற்குப் பெற்றுத் தந்தவர் அவர். இசை தெய்விகமானது. இசைக் கலைஞன் தனது இசையின் மூலம் சன்மார்க்கத்தையும், தெய்வபத்தியையும் உருவாக்குகின்றான். இவ்வரும் பணியினை மிகச் சிறந்த முறையிலே பல ஆண்டுகளாய் ஆற்றி வந்த 'சங்கீதபூஷணம்' பி. சந்திரசேகரம் அவர்கள் எமது பாராட்டிற்கு உரியவர்! அவருக்கு 'இசையரசு' என்ற பட்டம் அளித்துக் கௌரவித்தமைக்காக யாழ்ப்பாணம் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்திற்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்"

இவ்வாறு நல்லை யாதீனத்திலே அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தின் பதினேழாவது இசை விழாவில் ஊர்காவற்றுறை நீதிபதி திரு. K. V. நவரத்தினம் அவர்கள் கலந்து கொண்டு சந்திரசேகரம் அவர்களைப் பாராட்டிப் பேசும்போது கூறினர்.

இம்மன்றத்தின் 17 வது ஆண்டு தமிழிசை விழாவின் முதலாம்நாள் நிகழ்ச்சியின்போது ஆதீன கலா மண்டபத்தில் 'பாபநாசம் சிவன்' அரங்கில் பாராட்டு வைபவம் நிகழ்ந்தது.

நீதிபதியவர்களை யடுத்து பண்டித வித்துவான் திரு நாவுக்கரசு, திரு. சிவ. உ. சோமசேகரம், சங்கீத பூஷணம் ரி. இராசலிங்கம், வைத்திய கலாநிதி வி. கே. சிவஞான சுந்தரம் ஆகிய பெரியார்கள் பலரும் சந்திரசேகரம் அவர்களின் இசைச் சேவைகளைப் போற்றி உரையாற்றினர். ஈற்றில் யாவருக்கும் நன்றி கூறிய இசையரசு சந்திரசேகரம், "ஈழத்திலே கர்நாடக இசை வளரச் சங்கீத பூஷணங்கள் ஆற்றிய சேவையும், தியாகங்களும் மிகவும் குறிப்பிடத் தக்கன" என்றார்.

யாழ்ப்பாணம் அண்ணாமலை இசைத் தமிழ் மன்ற தலைவர் சங்கீத பூஷணம் ஏ. எஸ். இராமநாதன் அவர்கள் பட்டமளிப்பு வைபவத்திற்குத் தலைமை தாங்கினர். தமிழிசை விழா நல்லையாதீனத்திற் கடந்த 15-9-75 திங்கள் முதல் முசிரி சுப்பிரமணிய ஐயர் அரங்கு, செம்பை வைத்தியநாத பாகவதர் அரங்கு, புத்துவாட்டி சோமசுந்தரம் அரங்கு, ஜி. என். பி. அரங்கு ஆகிய நாமங்களைத் தாங்கிய அரங்குகளில் நிகழ்ந்தது, நாளையும் மறு தினமும் நவாலியூர் கோவிந்தசாமி அரங்கிலும், அளவை. தெட்சணாமூர்த்தி அரங்கிலும் இடம்பெறும். இசை விழாவில் நாட்டின் பல்வேறு பாகங்களிலும் உள்ள இசைவித்துவான்களின் நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. மேற்படி

---

திருமுருக.
கிருபானந்த வாரியாருக்கு

## அருணகிரிநாதர் விழா அழைப்பு

அருணகிரிநாதர் நூற்றாண்டு விழாவுக்குத் திருமுருக. கிருபானந்த வாரியாரையும் வேறு தென்னிந்திய அறிஞர்களையும் அழைப்பதற்கு யாழ். இந்து மாமன்றம் முடிவு செய்து செயற்குழுவொன்றை நியமித்திருக்கின்றது.

இக் குழுவின் அமைப்பாளராக மன்றச் செயலாளர் திரு. மயில். அமிர்தலிங்கமும் உறுப்பினராகத் திருவாளர்கள்: த. சோமசுந்தரம், க. சொக்கலிங்கம், வ. செ. செந்தில்நாதன், பொ. ச. குமாரசுவாமி, இராஜ. இராஜேஸ்வரன், க. சிவராமலிங்கம் இ. சங்கர், ப. சோமசுந்தரம் ஆகியோர் கடமையாற்றுகின்றனர்.

விழா கார்த்திகை 7, 8. 9 திகதிகளில் நிகழவிருக்கின்றது.

---

## நாவலரும் கோயிலும்

தொகுத்து அளித்தவர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்.

[ எழுதி உதவியவர் சி. சீவரத்தினம். ]

(முன் வளர்ச்சி — 20)

### 6. பெற்றோர்களுக்கு அறிவுரை.

நீங்கள் உங்கள் சமயக் கடவுளாகிய சிவபெருமானுடைய இலக்கணங்களையும், உங்கள் ஆன்மாவின் இலக்கணங்களையும், ஆன்மாவைப் பந்தித்த பந்தத்தின் இலக்கணங்களையும், புண்ணிய பாவங்களையும், அவைகளின் பயன்களாகிய சுவர்க்க - நரகங்களையும், சிவபெருமானை வழிபடும் முறைமையையும், அதனாலே பெறப்படும் முத்தியின் இலக்கணங்களையும், கிரமமாகப் படித்தாயினும் கேட்டாயினும் அறிகின்றீர்களில்லை, உங்கள் பிள்ளைகளுக்கு இவைகளைப் படிப்பிக்கின்றீர்களில்லை. உங்கள் கோயில்களிலே சிவ பத்தியை வளர்த்தற்கு ஏதுவாகிய வேத பாராயணம் தேவார திருவாசக பாராயணம் சைவ சமயப்பிரசங்கம் முதலிய நற் கருமங்களைச் செய்கின்றீர்களில்லை. ஆலயங்கள் ஆகமவிதிப்படி அமையாமை கண்டும் வாளா இருக்கின்றீர்களே!

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

---

நாவலர் ஆச்சிரமத்திற்

## சைவ சித்தாந்த வழிபாட்டு நெறி

சைவ பரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணி முதல் சைவ சித்தாந்த திருநெறிய தமிழ் வழிபாட்டுப் பயிற்சி நெறி இலவசமாக நடைபெறுகின்றது.

குரு லிங்க சங்க வழிபாட்டு அடிப்படையில் நடைபெறும் இப் பயிற்சி நெறியில் சைவ சித்தாந்த சாத்திரம், தோத்திரம். புராணம், வரலாறு. கலாசாரம், தருக்கம், இலக்கணம், இலக்கியம், சான்றோர் நினைவு முதலியவை இடம்பெறும், சைவ பாதுகாப்புச் சேவையினர் இதனை நடாத்துகின்றனர்.

---

## 'திருமுறைப் பண்ணிசைக் கலாநிதி'

நல்லை ஆதீன குரு மஹா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பரமாச்சார்ய சுவாமிகளது 9வது பீடாரோகண விழாவின்போது பரமாசார்ய சுவாமிகள் நல்லை ஆதீனப் பண்ணிசைப் புலவர் எஸ். கே. சிவபாலன் அவர்கட்கு திருமுறைப் பண்ணிசைக் கலாநிதி யெனும் சிறப்புப் பட்டம் சூட்டி பொன்னாடை போர்த்தி ஆசி வழங்கியருளினார்கள். அண்மையில் தொகுத்தெழுதிய பலன்தரும் பண்ணிசைப் பதிகங்கள் எனும் நூலைப் பாடத்திட்டமாகக் கொண்டு ஆதீனம் பண்ணிசைப் பரீட்சை ஒன்றை நடாத்த உள்ளது. ஞாயிறு தோறும் பி. ப. 4 மணி தொடக்கம் தேவார இன்னிசைப் பயிற்சி வகுப்பு ஆதீனத்தில் நடைபெற்று வருகின்றது. ஏராளமான மாணவர்கள் பயிலுகின்றனர்.

---

கல்லூரி மாணவ மாணவிகளின் நிகழ்ச்சியோடு தினமும் விழா ஆரம்பமாகி, மிகச் சிறப்பாக நடந்து வருகிறது. பெருந்தொகையான இரசிகப்பெருமக்கள் கலந்துகொண்டு மன்றத்தின் அரியபணியை வாழ்த்திச் செல்கின்றனர்.

— "வாணி" —

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையக முந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# 'இந்துசாதனம்

இராக்ஷத ஸு புரட்டாதி மீ ௪-உ வெள்ளி

## என் இந்த விபரீதம்?

சுழல் காற்று வீசும்பொழுது தொட்டதெல்லாவற்றையும் நிலை குலையச் செய்வதுபோல அரசியற் புயல் அடித்ததும் மாற்றங்கள் பல வந்தன. அவற்றுட் சில தடுமாற்றத்தையும் ஏமாற்றத்தையும் தருபவையாக இருப்பதைக் கண்டு மக்கள் மனக் கவலையுறுகின்றனர். இவற்றுள் ஒன்று விடுமுறைகள்பற்றியது. ஆகவே மிக முக்கியமானது, காரணம் அவை சமய சம்பந்தமானவையாதல்,

அரச கிரமத்தில் வேலைநாட்கள் இவை விடுதலை வேளை இவை என்ற ஒழுங்கு நெடுங்காலமாக உண்டு. பழைய காலத்தில் ஏகாதிபத்திய அதிகாரத்தில் ஆட்சியாளரின் மதத்துக்கு மேலதிக கவனம் கொடுக்கப்பட்டமையால் ஏனைய சமயங்களுக்குரிய திருநாட்கள் விடுதலை வேளையாகக் கணிக்கப்படவில்லை. மக்கள் இக் குறையை நீக்க வேண்டுமென்று மனுச்செய்தும் சட்ட நிருபண சபை உறுப்பினர்கள் மூலம் எடுத்துக் காட்டியும் காலத்திற்குக் காலம் சாதகமான மாற்றங்களைப் பெற்றனர். முடியாட்சி முடிவடைந்து குடியாட்சி இடம் பெற்றதும் மதங்களுக்குரிய விசேட நாட்கள் பல விடுதலை வேளைகளாயின. சைவமக்களின் முக்கிய தினங்களில் ஆடி அமாவாசை இந்த வரிசையிற் சேர்க்கப்படுதல்வேண்டுமென்று அரசினருக்குப் பல விண்ணப்பங்கள் செய்யப்பெற்று வருகின்றன.

இந்தச் சூழ்நிலையில் இருந்ததையும் இழக்கும் இடத்திற் சைவ மக்களை வைக்கும் விடுதலை முறை மாற்றம் வெளியிடப் பெற்றிருப்பதைக் கண்டு நாம் ஆச்சரியப்படுகின்றோம். சைவ மக்கள் சஞ்சலமுறுகின்றனர். பொது மக்கள் மதங்களின் மகத்துவத்துக்கு இம் மாற்றம் விபரீதத்தை விளைவிக்கும் என அஞ்சுகின்றனர்.

சிவராத்திரியும் தீபாவளியும் தவத்துக்கும் கண் விழிப்புக்கும் உரிய விசேட வேளைகள். இக் காரணம்பற்றியே இவை விடுதலை நாட்களாக வழங்கி வந்தன.

அரச கருமங்களுக்கு மேலதிக நாட்கள்வேண்டுமென்று அதிகாரிகள் எண்ண இடமுண்டு. அவ்வாறு ஒழுங்கு செய்வதற்கு வேறு வழிகள் உண்டு. சனிக்கிழமை விடுதலையை விலக்கி வேலை நாளாக்குவது ஒரு வழி. மத சம்பந்தமல்லாத விடுதலை நாட்களை முக்கியத்துவத்துக்குத் தக்க விதமாக விலக்குதல்.

எனவே அரசினர் இப்புது மாற்றத்தை மறுபரிசீலனை செய்து சமய வழிபாட்டுக்குரிய புனித நாட்களைப் பாதிக்காதவகையிற் புதிய ஒழுங்கொன்றை இயற்றுவது பொதுநலத்துக்கும் மத வளர்ச்சிக்கும் ஏற்றதாகும் என்று நாம் எண்ணுகின்றோம். எடுத்துக் காட்டுகின்றோம்.

---

## சமயப் பெருநாள் ..........................

(1-ஆம் பக்கத்து வளர்ச்சி)

சாதாரண விடுமுறை நாட்கள் போன்று இந்நாட்களையும் சமன் பாராட்டிய அதிகாரிகள் சமயச் சார்பில்லாதவர்கள் — மதம் என்பது போதையின் ஒரு விதம் என்று கூறும் இடதுசாரி சமசமாசக் கட்சி வெளியேறிய பின்புமா இந்த மதவிபரீதம் செய்கின்றனர்?

---

நேயர் நெஞ்சம்

## நம்மவர் நிலையை நாம் சிந்திக்க வேண்டாமா?

## இளைஞர் மன்றங்கள் இணைந்தாவது இன்னல்களை ஒழிக்க உழைத்திடுக!

[பஸ் பிரயாணத்தின்போது நிகழ்ந்த சம்பாஷணையைத் தழுவியது]

ஐயா,

கேரைதீவ — பூநகரி மார்க்கமாகக் கேதீஸ்வர நாதர் திருக்கோயிலுக்கு விசேச வண்டியில் (இ. போ. ச.) பிரயாணஞ் செய்து கொண்டிருந்தேன். என் அருகில் அமர்ந்திருந்த இன்னுமொரு பிரயாணி சோர்ந்த முகத்துடன் ஒரு பத்திரிகையைக் கையில்வைத்துக் கொண்டு ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார்! அவருடன் சில நிமிடங்கள் பேசினுலோ என எண்ணினேன்! அவரும் கதைக்கத்தொடங்கினர் இன்றைய கால மாற்றங்கள் மக்களின் போக்குப் போன்ற பல விடயங்கள் குறித்தும் தம கருத்துக்களைத் தெரிவித்தார், சற்று முன்னம நீண்ட பெருமூச்சு விட்டீர்களே! எதற்காக? என்றேன். வேதனையோடு அவர் கூறினர்: தான் தொழில் பார்க்கும் இலுப்பைக் கடவைக்குச் சமீபமாகக் கட்டாடி வயல் என்றழைக்கப்பெறும் சூழலில் வைரவப் பெருமானது கோயில் ஒன்றிருப்பதாகவும், இக் கோயிலில் கோழி பலியிடும் செயல் நிகழ்ந்து வருவது வழக்கமென்றும், இப் பழிச்செயலை நிறுத்தி விட முயற்சி பேச்சளவிலே இருந்து வருகிறது பிரசாரம் செய்ய வேண்டுமே என்று இளம் உள்ளங்கள் துடியாய்த் துடித்தன — ஆனல் இந்த ஆண்டு ஆங்கு என்ன நடந்ததோ தெரியாது...!

"கூட்டத்திற் கூடிநின்று
கூடிப் பிதற்ற லின்றி
நாட்டத்திற் கொள்ளாரடி
கிளியே! —
நாளில் மறப்பாரடி !!
— கிளியே! ...... என்ற

பாடலுக்கு இலக்கண புருடர்களாக நம்மிற பலரும் அமைந்துவிடுகின்றோம்! என்று விம்மலும பொருமலுமாக கூறிய அவர் பல இடங்களிலும் தீவிர பிரசாரம் வெற்றி தந்ததமையைக் குறிப்பிட்டு இன்னும் சில இடங்களில் இன்றும் இடம் பெற்று வரும் ஆடு, கோழி பலி நிறுத்தத்தில் உழைக்கப் பெரும் சபைகள மன்றங்கள் முன் வரவில்லையே! சைவச் செயல் வீரர்களைக் காணோமே! என்று நினைக்க ஏதோ பெருமூச்சு வந்ததண்ணே! என்று கூறினர்; இங்கு (மன்னர்) இலுப்பைக் கடவையிலே ஒரு வாசிகசாலை இருக்கின்றதாம், இந் நிலையத்தில சிறந்த சமுகத்தொண்டர்களும் பெரியோர்களும் அரிய பல பணிகள் செய்வதாகவும், கட்டாடி வயலில் வாழும் சைவப் பெரியோர்களும் ஆலயத்தொண்டர்களும் சைவ அறிஞர்களும் வைரவப் பெருமானது பேரருளை நினைந்து உருகி உறுதியாக உழைக்க முன வருவார்களேயானல் வெளியூர்களிலுள்ள பெரிய சங்கங்களும் கைகொடுத்துதவும். இதனால் இத்தலைமுறையில் இப் பகுதியில் பெரும் புண்ணியஞ் செய்தவர்களாவார்கள்! இந்த வேண்டுகோள் மக்கள் மனதை மாற்றுமா? எனறெல்லாம் கருத்துத் தெரிவித்தார். பாவம்! இப்படி எத்தனை உள்ளங்கள் நாட்டில் நல்ல காரியங்கள் நிகழ்ந்தாலோ என்று பெருமூச்சு விடுகின்றனவோ யாரறிவார் ?

### அராலியிலும் - இதே நிலை!

இஃதேபோன்று, யாழ் நகரில் வடுக்கோட்டைத் தொகுதியிலே அராலி (கிழக்கு)ப் பதியிலே வாலையம்பாள கோயிலிலும் வருடந்தோறும் விஜய தசமிப புண்ணிய தினத்தில ஆடு பலியிடும் பழிச் செயல நிகழ்கின்றது. இவ்வருடம் ஆங்கு பலி நிறுத்தப் பிரசாரம் வெற்றி தருமா? கடந்த ஆண்டுகள்போலத் தோல்வியா? உயிர்ப்பலியை நிறுத்துவோம் என வீர கோஷத்துடன அருட்பணித் தொண்டர்கள் குழாம் குழாமாகப் புறப்படட்டும்! "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்" என்னும் மந்திரத்தைப் போற்றுவோம் என்ற உணர்வு மக்கள மனதில் உதிக்கச் செய்யவேண்டும், இது போன்ற நற் கருமங்களை நாம ஒன்றுபட்டுக் கலந்து பேசிக் கருமமாற்றுவது கடமையன்றோ! பழிச்செயல நிகழ, எமக்கென்ன அங் கெங்கோ நடக்கின்றதாய! ஏன நாம் சிந்திக்கவேண்டும்! என்றெண்ணுவது நீதியா? நாட்டில் எந்த மூலை முடுக்கிலுள்ள கோயிலிலும் பலி என்ற பேச்சே இல்லாமற் செய்ய அனபுநிலைச் சட்டத்தை வகுப்பார்களாக! இல்லையேல் நாம, காந்திப் பத்தர்கள் என்றோ, பாரதியைப் போற்றுபவர்கள — வள்ளுவன் குறளைச் சிந்தப்பவர்களென்றோ — நாவலர்பெருமான கருத்துக்களைப் பரப்புகின்றோமென்றோ திருப்தியுற முடியுமா ? சிந்தியுங்கள!

"சைவாபிமானி"

யாழ்ப்பாணம், 12-9-75.

---

## சுந்தரர் தமிழ் மிஞ்சு தமிழ்

—o—

உரும்பராயில்

தங்கம்மா அப்பாக்குட்டி உரை

சுந்தரர் தம்பிரான் தோழராய் இருந்து தமிழ் பாடினர். சுந்தரர் தமிழ் செந்தமிழ்; ஞானசம்பந்தர் தமிழ் கொஞ்சு தமிழ்; நாவுக்கரசர் தமிழ் கெஞ்சு தமிழ்; சுந்தரர் செந்தமிழோ மிஞ்சுதமிழ் சுந்தரர் தெய்வத்தமிழ்ப் பாடல்களின் மூலம் அடியார்களுக்கு தேவாரப் பக்தி ரச விருந்தை யளித்தார். அவர் பாடல்களைப் பக்தி சிரத்தையோடு யாம் பாராயணம் பண்ணினல் நிச்சயம் உய்தி பெறுவோம்.

உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் கோயில் ஏழாம் திருவிழா வைபவத்தில் உரையாற்றிய சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி 'சுந்தரர் செந்தமிழ்' என்ற தலைப்பில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

பிரம்மஸ்ரீ. ச. பரமேஸ்வரக்குருக்கள் தலைமை தாங்கிப் பேசுகையில் "தேவாரம் வேத சாரம் என்பர். வேதக் கருத்துக்களையே உள்ளடக்கி தேவார முதலிகள் தேவாரங்களைப் பாடினர். சுந்தரரது ஏழாம் திருமுறைப்பாடல்கள செந்தமிழ்ப்பாடல்கள்" என்றார்.

திருப்பணிச்சபைக் காரியதரிசி திரு. அ. பஞ்சாட்சரம் நன்றி தெரிவித்துப் பேசினர்.

---

## சேக்கிழார் சுவாமிகள் கண்ட தமிழகமும் இல்லறமும்

[ செ. சின்னத்துரை இளைப்பாறிய ஆசிரியர் ]

(முன் வளர்ச்சி – 6)

"பாலறாவாயர்" என்றும் ஒருவரைத் தம்பியாகக் கொண்ட அருள்மொழித் தேவராகும் சேக்கிழார் சுவாமிகள் வேதசிவாகமங்கள், உபநிடதங்கள் திருமூலர் திருமந்திரம் திருக்குறள் முதலிய நூல்களை ஐயந்திரிபறத் திருவருளே கண்ணாகப் பெற்று [illegible] என்னும் முப்பொருள்களின் தன்மையை உள்ளவாறு பொருளை உணர்ந்து ஆராய்ந்து, கற்றுத் தெரிந்து பளிங்குபோன்ற உள்ளத்தைப் பெற்றார். அத்துடன் நாயன்மார்கள் வாழ்ந்த இடங்கள் அவர்கள் பாதயாத்திரையாகச் சென்ற இடங்கள் முதலியவற்றையும் நேரிற் பார்த்தார் சேக்கிழார் பெருமான்.

திருமுறைகளைப் பயபத்தி சிரத்தையோடு ஓதினர். அவற்றில் பொதிந்த உட்பொருளை உணர்ந்து அவற்றை ஓதுவதினால் வரும் இன்பத் தேனைப் பருகியும், இராமயாணம், பாரதம் முதலியனவும உவமைக்கு ஒப்பாகாத மிகவும் உயர்ந்த ஒப்பற்ற ஞான பொக்கிஷமாகும் பெரியபுராணத்தை எழுதி முடித்தார். இத்தகைய அருமையும் பெருமையும் வாய்ந்த திவ்விய பெரிய புராணத்தில் அங்காங்கு காணப்படும் நற்சிந்தனைக்கு விருந்தாகும் சிலவற்றை ஆராய்வாம். அற்புதமான சேக்கிழார் பெருமான் தெய்வக் காட்சிகளைப் பற்பல இடங்களிற் செறிந்து விளங்க தமிழ் நாட்டின் சீரிய தெய்வ நிலையை உணர்த்துகின்றார்.

'வேத ஓசையும் வீணையின்
ஓசையும்
சோதிவானவர் தோத்திர
ஓசையும்
மாதர் ஆடல் மணிமுழ
வோசையும்
கீத ஓசையுமாய்க் கிளர்
வுற்றவே.'

என்பது திருவாரூர் நகரச் சிறப்பைக் கூறும செய்யுளாகும், திருவாரூரிற் பரவையார் வீட்டிற்கு சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பொருட்டாக சிவபெருமான் பரவையாரின் ஊடலைத் தீர்ப்பதற்காக தூதுவராகச் சென்

(வளர்ச்சி 4-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலரும் - கோயிலும்

( 1 ஆம் பக்கத்து வளர்ச்சு )

உங்கள் குருமார்கள் உங்களுக்காயினும் உங்கள் பிள்ளைகளுக்காயினும் உங்கள் சமயத்தையும் நல்லொழுக்கத்தையும் போதிக்கின்றார்களா? உங்கள் கோயில்களிலே சைவ சமயப் பிரசங்கஞ் செய்கின்றார்களா? பள்ளிக்கூடங்களைத் தாபித்து உங்கள் பிள்ளைகளைப் படிப்பிக்கின்றார்களா? உங்களுள் யாராயினும் மற்றொரு மதத்திலே பிரவேசிக்கப் போம்பொழுது பரிதபித்து அவருக்குச் சைவ சமயத்தினது மகிமையை அறிவித்து அவரைத் தடுக்கின்றார்களா?

உங்கள் சமயத்தைக் கண்டிக்கும்பொழுது அவர்களை எதிர்த்து உங்கள் சமயத்தை நிறுத்தத் தொடங்குகின்றார்களா?

உங்கள் குருமாருள் யாரொருவரேனும் எப்பொழுதாயினும் உங்களுள் யாரொருவரையேனும் பார்த்து,

"நீ கொலை செய்யாதே; களவெடாதே; மது பானம் பண்ணாதே; மாமிசம் புசியாதே; பொய் பேசாதே; வியபிசாரஞ் செய்யாதே; சூதாடாதே" என்று வாய் திறந்ததுண்டா?

உங்கள் குருமாருள்ளே கல்வியும் நல்லொழுக்கமும் உடையவர் சிலர் உளரேயாயினும், அவர்கள் தங்கள் கடமையை எவ்வளவேனுஞ் செய்யக் காணேமே!

ஊர் தோறும் பள்ளிக்கூடங்கள் தாபித்து, உங்களுள்ளே கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்த மேலோர்களைக் கொண்டு அவைகளை நடத்துவியுங்கள். உங்கள் பிள்ளைகளை அப் பள்ளிக்கூடங்களுக்கே யனுப்பி லௌகிக நூல்களையும் நீதி நூல்களையும் சைவ சமய நூல்களையும் படிப்பியுங்கள்.

சாதாரணக் கல்வி விசாரணைத் தலைமைத் துரைக்கு விண்ணப்பம் எழுதிக் கவர்ண்மெண்டாரிடத்திலே பொருளுதவி பெற்று, லௌகிக நூற் கல்வியை விருத்தி செய்யுங்கள்.

இதற்கு இடையூறு நிகழுமாயின் நீங்களெல்லாம் திரண்டு கவர்மெண்டாருக்கு விண்ணப்பித்து ஆவன செய்யுங்கள்;

குடிகள் விண்ணப்பம் அனுப்பினால், அதைச் சீர்தூக்கிப் பார்த்து நன்மை செய்யாது விடுவார்களா?

குற்றம் உங்களிடத்தேயன்றிக் கவர்மெண்டாரிடத்தன்று,

"வேத நெறி தழைத்தோங்க
மிகு சைவத் துறை விளங்க"

முருகன் துணை.

முற்றும்.

# பாரதி விழா

— 0 —

கொழும்பு விவேகானந்த சபை ஆதரவில் சபை மண்டபத்தில் இன்று (19-9-75) மாலை பாரதி விழா சிறப்பாக நடைபெறவுள்ளது. இசை நிகழ்ச்சி விவாத அரங்கு ஆகியன விழாவின் சிறப்பு நிகழ்ச்சிகளாகும்.

# சேக்கிழார்

( 2ம் பக்க வளர்ச்சி)

ரூர், எம்பெருமானின் திருவடிபட்ட இடமாகும் திருவாரூர் நறுமணம் கமழ்ந்து காட்டும் என்கிறார்.

"படர்ந்த பேரொளிப்பன்
மணிவீதிபார்
இடந்த ஏனமும் அன்னமும் தேடுவார்
தொடர்ந்து கொண்டவன்
தொண்டர்க்குத்தூதுபோய்
நடந்த செந்தாமரை யடி
நாறுமால்

"தாழ்ந்த வேணியர் சைவர்
தபோதனர்
வாழ்ந்த சிந்தை முனிவர்
மறையவர்" என்றும்

"தெள்ளும் ஓசைத்திருப்
பதிகங்கள்
கிள்ளை பாடுவ கேட்பன
பூவைகாள்"

என்னும் ஓர் சிவமாகிய ஞானக்கண்கொண்டு பார்க்கிறார். அமைதியும் தெளிவும் பொருந்திய உள்ளக் காட்சியைப் பெற்ற மக்கள் வாழ்ந்தார்கள்,

"மேகமும் களிறும் எங்கும்
வேதமும் கிடையும்
எங்கும்
யாகமும் தவமும் எங்கும்
ஊசலும் மறுகும் எங்கும்
போகமும் பொலிவும் எங்
கும் புண்ணிய முனிவர்
எங்கும்"

என்னும் சோழநாட்டின் சிறப்பைக் கூறவந்த சேக்கிழார் சுவாமிகள் மிகவும் நயம்படக் கூறுகிறார்,

'வீதிகள் விழவின் ஆர்ப்பும்
விரும்பினர் விருந்தின்
ஆர்ப்பும்
சாதிகள் நெறியில் தப்பா
தனையரும் மனையில் தப்பா
நீதிய புள்ளும் மாவும்
நிலத்துளபுள்ளும் மாவும்
ஓதிய எழுத்தாம் அஞ்சும்
உறுபிணிவரதாம் அஞ்சும்'

வீதிகள் விழாக் கோலம் கொண்டிருக்கு மென்றும் விருந்தினரின் அழனி எங்கும் மலிந்திருக்குமென்று வருணச் சிரதர்மப்படி மக்கள் ஒழுகுவார்கள் என்றும் சோழ நாட்டுச் சிறப்பின் தொடர்ந்து கூறுகிறார். பிள்ளைகள் எல்லா வீட்டிலும் உளர் என்றும் நில இயறகைக்குத் தக்கதாக எல்லாரும் வாழ்வார்களென்றும் கூறுகிறார். எல்லோரும் மகா மந்திரமாகிய பஞ்சாட்சரத்தை உச்சரிப்பார்களாம். ஆகையால் நோய்கள் மக்களை அணுக அஞ்சும் என்கின்றார். பஞ்சாட்சர செபத்தின் இம்மைப் பயன்களில் பிணி நீக்கப் ஒன்று என்பதை [illegible]

(வளரும்)

# ஆவணி மூலத் திருநாள்

[ எமது சிதம்பரம் சிறப்பு நிருபர் திரு. மா. பாலசுப்பிரமணியன் ]

திருதருமை ஆதீனத்தின் 26 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆவணிமூலத் திருநாளை 11, 12, 13 9-75 தேதிகளிலும் சிறப்பாக நடத்திவைத்தார்கள்.

ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் 13—9—75 ஆம் நாள் காலை சொக்கநாதப்பெருமானுக்கு ஆவணி மூலத் திருநாளின் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடத்திப் பக்தகோடிகளுக்கு அருள் பிரசாதம் வழங்கி விழாவின் மலராக 'ஸ்ரீ புன்னும்பிகை கலைஞான தீபம்" என்ற நூலைக் கருத்துரையுடன் அச்சிடுவித்து வெளியீடு செய்தார்கள்.

ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் மாலையில் ஆவணி மூலத்திருநாள் பட்டமளிப்பு விழாவிற்கு எழுந்தருளி, மதுரைத் தியாகராயர் கல்லூரிச் சித்தாந்தப் பேராசிரியர் திரு, அ, சங்கரநாராயணன் அவர்களுக்கு "செந்தமிழ்ச் சிவநெறிச் செம்மல்" என்ற சிறப்புப் பட்டம் வழங்கி (பொற் பதக்கம்) உயர்ந்த பொன்னாடைப் போர்த்தி மலர்மாலை அணிவித்து ஆசியுரை வழங்கினார்கள் இது வரை ஆவணிமூலத்திருநாள் பட்டமளிப்பு விழாக்களில் 25 பெரும் புலவர்களுக்கு ஆவணி மூலப் பட்டம் வழங்கப்பட்டுள்ளது,

x x x

திருவாவடுதுறை ஆதீனம் 21 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களும் ஸ்ரீ மறைஞானசம்பந்தர் திருக்கோயிலில் குருபூசை விழாவை நடத்தி வைத்தார்கள்.

**நீரைத் தேக்கி நிலத்தை வளஞ்செய்**

# கலை, கைப்பணிக் கண் கர்ட்சி விழர்

கோப்பாய்க் கம்வி வட்டாரம், கலை கைப்பணிக் கண்காட்சி விழா எதிர் வரும் 29-9-75 முதல் 1-10-75 வரை கோப்பாய்க் கிறிஸ்தவக் கல்லூரியில் நிகழவிருக்கிறது.

# கோட்டுக் கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் வழ· இல. 12710

1. கறணவாய் வடக்கு கரவெட்டியைச் சேர்ந்த தம்பையா பொன்னையாவும் 2. பெண் நல்லம்மாவும் -வாதிகள்.

எதிராக

1. கறணவாய் தெற்கு கரவெட்டியைச் சேர்ந்த கந்தர் செல்வத்துரையும் 2. மாதா கிட்டிணர் கைம்பெண் செல்லாச்சியும்.
-பிரதிவாதிகள்.

மேற் குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப் படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப் பட்டிருக்கும் ஆதனங்களை 1975-ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 18 - ஆந் தேதி ( 18-10-1975 ) சனிக்கிழமை மூற்பகல் 10·00 மணி தொடக்கம் குறித்த ஆதனங்களிடமாக விருந்து 1-ம் காணி 10-00 மணிக்கும் 2-ம் காணி 10-30 மணிக்கும் 3-ம் காணி 11-00 மணிக்கும் என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

| | | |
|---|---|---|
| முதலாம் ஆதனத்தின் மதிக்கப்பட்ட விலை | ரூபா | 6067.70 |
| இரண்டாம் ஆதனததின் மதிக்கப்பட்ட விலை | ரூபா | 5395.73 |
| மூன்ரும் „ „ | „ | 7265.58 |

## ஆதன டாப்பு

வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று

1. கரணவாய் இளகாமக்குறிச்சியிறை "பூணுவளை" நி, பர 7 குளி 8½, இதிற் குறித்த பிரிவிடல் வழக்கு (6614) க் கடைசித் தீர்வையோடணைக்கப்பட்டதும் 1964 ம் ஞூ வைகாசி மீ 27 ந உ உலாந்தா மேஸ்தர் P. ஐயாத்துரையால் 529·ஆம் இலக்கத்தில் விந்தாரிக்கப் பட்டதுமான படத்தின் படி நிர 7 குளி 9 6/32 இதில் குறித்தபடத்தில் கண்ட3ம் நம்பர் துணடுக்கு நிர 2 குளி 13/32 எல்லை கிழக்கு எங்களில் 2ம் பேருக்கும் மறுபேருக்குமுடைய வாதனம் வடக்கு றேட்டு மேற்கு வல்லியப்பர் செல்லையா பெண் சின்னம்மாவுக்கும் மறுபேருக்கு முடையவாதனம் தெற்கு வல்லியப்பர் செல்லையா பெண சின்னம்மாவுக்கும் மறுபேருக்குமுடையவாதனமும் செல்லத்துரை பெண் பாக்கியத்துக்குடையவாதனம் இதடங்கலும் இன்னும் குறித்த படத்திற் கண்ட 4 ம் நம்பர் துண்டிலும் 6ம் நம்பர் துண்டிலுள்ள கிணற்றிலும் இதற்குரிய பங்கும்,

2. ஷை இறை வதிராவத்தை தெற்குப் பாதி நிர, 4½ பூணுவளை தோட்டம் 1 ஷை நிர 6¼ ஷை தோட்டம் நிர 2½ இவைகளில் றேட்டுக் நிலம் பிறநீங்கலாக மிகுதியில் ஆட்சிப்படி நிர 7½ இதில் கிழக்குப் புறமாக நிர 3 குளி 10½ எல்லைகிழக்கு கார்த்திகேசு வல்லிபுரத்துக்குடையவாதனம் வடக்கு றேட்டு மேற்கு இராமலிங்கம் செல்லப்பாவின் உரிமைக்காரருடைய வாதனம் தெற்கு செல்லத்துரை பெண் பாக்கியத்தின் உரிமைக்காரருடைய வாதனம் இவ் வெல்லைக்குளடங்கிய முழுவதில் சொரியலாய் அரைப்பங்கும் மேற்கெல்லைக் காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் வழிவாய்க்காலுருத்தும் பதிவு A 91/236

3. ஷை இறை குருக்கட்டுப்புலம் நிர 23¼ இதிலாட்சிப்படி மேற்கரைவாசியில வடக்குப்புறமாக அரைவாசிக்கு நிர 5 குளி 14 5/8 எல்லை கிழக்கு கணபதிப்பிள்ளை வல்லிபுரத்தின் ஆதனம் வடக்கு பூலோகநாதாமரின் ஆதனம் மேறகு அந்திரன் சநதைக்குரிய நிலம தெற்கு ஒழுங்கை இவ்வெல்லைக்குளடங்கிய முழுவதில் சொரியலாய் ஆறில் ஐந்து 5/6 பங்கும் பதிவு A 244/14

| | | |
|---|---|---|
| (1) தீர்வைத்தொகை | ரூபா | 5942·20 |
| (2) 1-7-74 தொடக்கம் 6-11-74 வரை (4 மாதம்) ரூபா 4000 க்கு 10 வீத வட்டி | | 133-33 |
| (3) 7-11-74 தொடககம் 6-8-75 வரை (9 மாதம்) ரூபா 6075 க்கு 5 வீத வட்டி | | 227-79 |
| (4) கோட்டுச் செலவு | | 229-60 |
| | ரூபா | 6532-82 |

க. நா. சுப்பிரமணியம்
கொமிஷனரும்
விலைமதிப்பாளரும்

புலோலி மேற்கு,
புலோலி
14-9-75

80. 19-9

# அமைச்சர் அவை மாற்றி அமைப்பு

சுதந்திரக்கட்சிப் பொதுச்செயலாளர் திரு, எஸ். கே. கே. சூரியாச்சியும் திரு. இரத்தினசிரிவிக்கிரம நாயகாவும் புதிய அமைச்சர்களாய் முன்னவர் உணவு கூட்டுறவு கைத்தொழில் முதலியவற்றுக்கும் பின்னவர் தோட்டக் கைத்தொழிலுக்கும் பொறுப்பாகின்றனர்.

திரு பீலிக்சு பண்டார நாயகா நீதி அமைச்சராயும் நிதி அமைச்சராயும் திரு, டபிள்யூ. பி, வை ஆரிய தாசா உள்ளூர் மன்ற அமைச்சராயும் கடமை ஏற்றனர்,

# போதனை வளாகத்திற் பேறிஞர் நினைவுவிழா

ஆனந்தக்குமாரசுவாமி நினைவு விழா 9-9-1975 இலங்கைப் பல்கலைக் கழகப் போதனை வளாகத்திலே நிகழ்ந்தது இச்சார்பில் ஒரு நினைவு மலரும் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### THOUGHTS TO BE TREASURED

கல்லொளியே என நின்ற வடதிசை
கல்லொளியே என நின்றனன் இந்திரன்,
கல்லொளியே என நின்ற சிகரத்தைக்
கல்லொளியே எனக் காட்டினன் தானே.

The Lord resides like a beacon on the (Kailasa Mountain in the North He displays the never-failing Sri Panchakcharam as a beacon light.

திருச்சிற்றம்பலம்
நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.
திருச்சிற்றம்பலம்

Hindu Organ

FRIDAY, SEPTEMBER 19, 1975

## Sivarathiri and Deepavali Holidays Should Continue

Political changes are understandable. Administrative adjustments may become necessary. But by what stretch of imagination, the Minister concerned has decided to strike out Sivarathiri and Deepavali Days from the list of Public Holidays for the calendar year 1976, we are unable to comprehend. If, however, the Minister has suddenly discovered that more holidays make officers less attentive to work or impair the efficiency of administration then the more logical method would have been to knock out non-religious holidays such as the May Day. But if the convenience of the public is adduced as a reason to provide for more working days then the Saturday—half day can be left out of the list of non working days.

Analysing the question a little more we wish to point out to the Authorities that the same significance that is attached to Poya Holidays must apply to Sivarathiri and Deepavali, two of the most important religious occasions for the Hindus It will be useful to refer to the persistent agitation in the forgotten past to have Sivarathiri and Deepavali days declared Public Holidays.

That there are too many public holidays is an untenable argument to be adduced in support of the curtailment of such occasions. There are holidays that fall on Saturdays or Sundays and thus are of no account in reckoning working days.

The Saiva Public have been taken by surprise by this most provocative action of the Authorities in applying the axe at two points of the Saiva Scheme of Holidays making disrespect for this Great Religion doubly discomforting.

We need not elaborate on the significance of Sivarthri and Deepavali as facts are well known. We would only appeal to the Authorities to reverse their decision regarding religious holidays and to allow all religionists the privilege they have been rightfully enjoying in respect of public holidays. In fact the Saiva Public require one more occasion to be declared a Public Holiday, namely the Adi Amavasai Day. If on the eve of this legitimate agitation, the Authorities have decided to take away privileges that are already being enjoyed it would be a stunning blow to the Hindus. We are confident that the Authorities will not fail to value the protests of the Hindus and restore the two holidays — Sivarathri and Deepavali.

# Principal (Emeritus) of Premier Hindu College

## Tributes to Mr. E. Sabalingam

By
T. SOMASUNDARAM
( President Saiva Paripalana Sabhai, Vice President All Ceylon Sekkilar Manram )

It is no exaggeration to say that Mr. E. Sabalingam dominated the field of education during the past ten or fifteen years. During this period he was the Principal of the Jaffna Central College and the Jaffna Hindu College, two of the premier educational institutions in the Island. His activities were not confined to education alone. He was keenly interested in sports, having been a keen sportsman in his young days and did everything possible to improve the standard of the sports particularly in Jaffna and in Northern Province. It is but fitting that his efforts were crowned with success when this year the Jaffna Hindu College became the champions.

Mr. Sabalingam was and is a keen social and religious worker. He is a founder member of the Hindu Welfare Society and is its Vice-President. This society supplies clothes to the orphans at the Tirunelvely Hindu Orphanage on Deepavali day and has been doing this for the last six or seven years.

Now I come to the most important religious activities of Mr. Sabalingam. At the Jaffna Central College where Sri La Sri Arumuga Navalar was a teacher. Mr. Sabalingam introduced the religious practices of the Saiva Religion to the Saiva students and made the students take meaningful steps to observe the Saiva religious rites and practices and to celebrate the important Saiva Religious days.

Mr. Sabalingam who was a member of the Saiva Paripalana Sabhai, the oldest Hindu Institution in Sri Lanka (founded in 1888) functions as member of the Board of Management of the Sabhai. His contribution to the welfare and improvement of the Sabhai is very great. The most important contribution was his insisting on the appointment of a competent manager for the Saiva Prakasa Press controlled and managed by the Sabhai which resulted in the appointment of the present manager in spite of opposition. I am very happy to state that the Saiva Prakasa Press which was run at a loss for a number of years. is making a profit of about thirty thousand rupees a year under the new manager. Mr, Sabalingam was so outspoken and forthright in his criticism and rendered very useful service to the management of the affairs of the Sabhai that the said Board of Management nominated him to no less than five sub-committees of the Sabhai. On the suggestion and advice of Mr. Sabalingam, the Sabhai has prepared a new programme of work which will be implemented in the coming years.

The religious activities of Mr. Sabalingam were recognised by the All Ceylon Sekkilar Manram in his election as President of the Manram, under his Presidentship Sekkilar Vila was celebrated this year with great success. He was Vice President of the Manram for many years.

Mr, Sabalingam is due to leave Sri Lanka to take up a high appointment in the Education Department in Nigeria. On the eve of his departure there are many farewel functions and parties arranged. One such function will be held in his honour today by the All Ceylon Sekkilar Manram of which he is the President.

In conclusion I wish to thank Mr Sabalingam on my own behalf and on behalf of the Saiva Paripalana Sabhai and the All Ceylon Sekkilar Manram for the invaluable services rendered by him to both these associations. He was an administrator par excellence, advisor and counsellor When I think of Mr. Sabalingam I am reminded of the Latin Preverb "Nullum Quod tetigit non ornavit" which is translated into English as follows: "He adorned everything he touched,"

### Auction Sale of Unredeemed Jewellery

I shall sell by public auction the unredeemed jewellery pawned between 1-8-1968 and 1-4-1974 with Mrs. S. Paramoo of No. 222 K. K. S. Road Jaffna on Tuesday 30-9-1975 commencing at 9 A. M. at the said pawn shop.

"Raja giri"
643, K. K. S. Road
Jaffna

V. S. Cuttipillai,
Auctioneer.
19, 5. 12-9

## NOTICE

IN THE DISTRICT COURT OF JAFFNA

No. P. 1578

Kandiah Rajendram of Tholpuram

Vs. Plaintiff

1 Sivapackiam widow of Sinnadurai of Thodilady. Chankanai East
2 Rasiah Saravanapavanandan of Chankanai East. presently in Malaysia
3 Kumaravelu Shanmuganathan Teacher Neervely South
4 Kandiah Tharmalingam
5 Kandiah Nadarajah
6 Kandiah Gunaratnam and
7 Velupillai Ratnam of Neervely

Defendants

It is hereby notified that action No. P. 1578 has been instituted in the above action under the Partition Act No. 16 of 1951 for the partition of the land called "Nedunkanni" alias Nedunkerni in extent 58 Lms. V. C. and situated at Neervely in the Parish of Kopay in the Division of Valigamam East, Jaffna District Northern Province.

The defendants in the aforesaid action are summoned to appear in Court on the 24th day of September 1975 at 10, O'clock of the forenoon.

By order of Court,
T. Gnanesparan
for Registrar.

This 17th day of September 1975

Drawn by
M K. Subramaniam
Attorney-at-Law
for Plaintiff

22 12-9

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press [illegible] K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday September 19, 1975.

EDITOR-IN-CHIEF R. N. SIVAPIRAKASAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org